அந்தயும் மீறி அவர்கள் செயல்பட்டால், அந்த ஆலைகளை மூடுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 145, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

145—

பேருந்து நிறுத்தங்களில் நடத்துநர்கள்.

*2894 திரு. டி. சுதர்சனம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நெரிசலைத் தவிர்க்க பேருந்து நிறுத்தங்களில் நடத்துனர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பயணிகள் வழியில் காத்திருக்கும் நேரங்களை குறைத்து அவர்கள் துரித பயணத்திற்கு உதவும் வகையில் 19 பெண் பயணச் சீட்டு விற்பனையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும் 47 பேருந்து நிறுத்தங்களில் பரிட்சார்த்தமாக பணி செய்கின்றனர்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு பஸ் ஸ்டாப்புகள் இருக்கின்றன. அந்த பஸ் ஸ்டாப்புகளிலிருந்து ஏறுகின்றவர்கள், 'பீக் அவர்ஸ்' என்று சொல்கிறார்களே, அந்த நேரங்களிலே ஏறி, டிக்கெட் வாங்காமலேயே சில பயணிகள் இறங்கிப் போய் விடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டி ஆங்காங்கே பஸ் கண்டக்டர்களை நியமித்து, அங்கேயே அவர்களுக்கு டிக்கெட் வழங்கி விட்டால் பஸ்ஸில் ஏறியவுடன் டிக்கெட் வாங்குவதில் இந்தப் பிரச்சினை இருக்காது. இதைத் தீர்க்க, பஸ் ஸ்டாப்புகளிலேயே டிக்கெட் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் 47 இடங்களிலே அதிகமான பேருந்துகள் இயக்கப்படுகின்ற இடத்திலே அதே இடத்தில் பயணச் சீட்டுகளை விரைவாக வழங்கி அவர்களுக்கு காலதாமதம் இல்லாமல் பேருந்திலே பயணம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே 19 இடங்களில் இப்போது அந்த பயணச் சீட்டுகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு மாத காலத்திற்குள் 47 இடங்களிலும் பயணச் சீட்டுகளை வழங்குவதற்கு நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் ஓடும் பேருந்துகளில் ஜன நெரிசலைக் குறைப்பதற்காக பம்பாயில் ஓடும் மாடி பஸ்களைப் போன்று இங்கே விடுவதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடி பஸ்களை விடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. காரணம் மாடி பஸ்களில் ஏறி இறங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால், கூடுதலாக பேருந்துகளை விடுவதற்கு உலக வங்கியின் கடன் உதவியோடு மிக விரைவாக 500 புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் பேருந்துகளில் படிக்கெட்டுகளில் நின்று கொண்டு பயணம் செய்யும் அளவிற்கு நடத்துனர்கள் பயணிகளை ஏற்றுகிறார்கள். அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் பயணிகள் பேருந்துகளின் படிக்கட்டுகளில் நின்று கொண்டு பயணம் செய்கிறார்கள். நடத்துனர்கள் இது போன்ற நிலையினை உருவாக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். நடத்துனர்கள், பயணிகளைப் பார்த்து உள்ளே செல்லுங்கள் என்று சொன்னாலும் கூட, அவர்கள் 'புட் போர்டில்' நின்று கொண்டுதான்

பயணம் செய்வோம் என்று பிடிவாதமாக சில பேர்கள் சொல்வதால்தான் இது போன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பேருந்துகள் நிற்கின்ற இடங்களில் அதிகமான பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நெரிசல் நேரங்களில் அதிகமான ஆண்களும் பெண்களும் வருகிற காரணத்தாலும் கர்ப்பமாய் இருக்கிற பெண்கள் அவதிப்படுகின்ற காரணத்தாலும், இடம் கிடைக்காத காரணத்தால் ஆண்களும் பெண்களும் முட்டி மோதிக் கொண்டிருக்கிற காரணத்தாலும், பேருந்து நிலையங்களிலே மகளிர் நடத்துனர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : பெண்கள் பயணம் செய்வதற்கு உதவி செய்வதற்காகத்தான் இப்போது நெரிசலாக இருக்கும் இடங்களில், பேருந்துகள் நிற்கும் அதே இடத்தில் ஸ்டேன்டிங் கண்டக்டர்களாக பணியாற்றுவது கொஞ்சம் கடினமாக இருக்கிறது என்ற அடிப்படையிலேதான், முதலிலே 19 பேர்களை நடத்துனர்களாக பணியிலே அமர்த்தினாலும் கூட, அவர்களால் உள்ளே சென்று பயணச் சீட்டுகளை வழங்கி அங்கே பயணம் செய்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய முடியவில்லை. அதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்ட காரணத்தாலேதான் அவர்கள் அனைவரும் பயணச் சீட்டுகளை மட்டும் நெரிசலாக இருக்கிற நேரங்களிலே அதிக பேருந்துகள் நிற்கும் இடத்திலேயே ஸ்டேன்டிங் கண்டக்டர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [வினா எண் 146, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

146—

சமயபுரம் செல்ல புதிய பேருந்து.

* 5306 திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாய்லர் தொழிற்சாலையிலிருந்து வேங்கூர் வழியாக சமயபுரம் செல்ல புதிய பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?